III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

MCOP. 630/2019

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 17-08-2022

| | | | |
|---|---|---|---|
| Name | :Vijayan | Caste | : |
| Father's/Husband's Name | :Gajendiran | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**<u>பிரமாண பத்திரத்தின் தொடர்ச்சியாக முதல் விசாரணை/-</u>**

நான் மனுவின் இரண்டாவது மனுதாரர். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். மேலும் எனது தரப்பில் 20 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அவற்றின் விவரங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை, ம.தா.சா.1 முதல் 20 வரை ஆகும். நான் இந்த வழக்கில் கேட்டுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>இரண்டாம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நானும் எனது தாயாரும் பைக்கில் சென்று கொண்டிருந்த போது எனக்கு பின்னால் வந்த லாரி மோதியதால் விபத்து நடைபெற்றது. விபத்தை நான் நேரில் பார்த்தேன். காவல் நிலையத்தில் புகார் நான் தான் கொடுத்தேன். முதல் தகவல் அறிக்கையில் தார் சாலையில் ஏறிய போது சாலையின் ஓரம் சிலிப்பாகி நிலை தடுமாறி மோட்டார் சைக்கிளுடன் சாலையில் விழுந்தோம் என்றும் அப்போது எங்களுக்கு பின்னால் வந்த கண்டெய்னர் லாரி எனது அம்மாவின் வயிற்றின் மீது ஏறி இழுத்து சென்றது என்று சொல்லியுள்ளேன் என்றால் லாரி இடித்து தான் நாங்கள் கீழே விழுந்தோம். இந்த வழக்கிற்காக நான்ட மேற்கூறியவாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு லேசான காயம் ஏற்பட்டது. எனது தாயார் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். எனது தாயாரின் வயது விபத்தின் போது 52. அதை காண்பிக்க ஆதார் அட்டையின் நகல் தாக்கல் செய்துள்ளேன். உடற்கூறாய்வு சான்றிதழில் எனது

தாயாரின் வயது 52 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் 1984ல் பிறந்தேன். எனது தற்போதைய வயது 38. எனது தம்பி வினோத் குமார் 1986 லும் எனது இன்னொரு தம்பி கார்த்திக் 1988லும் பிறந்தார். எனது தகப்பனாரின் வயது 68. வாரிசு உரிமை சான்றிதழில் எனது தகப்பனாரின் வயது 69 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எனது ரேஷன் கார்டின் நகல் தாக்கல் செய்யவில்லை. எனக்கு திருமணமாகிவிட்டது. எனது சகோதரர் கார்த்திக்கு திருமணமாகிவிட்டது. எனது இன்னொரு சகோதரர் வினோத் குமாருக்கு திருமணமாகவில்லை. மனுதாரர் நால்வரும் ஒரே வீட்டில் குடியிருந்துவருகிறோம். விபத்து காலத்தில் எனது தாயார் டிபன் கடை வைத்து வந்தார். மனுவில் டிபன் கடையில் வேலை செய்து வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது தாயாரின் தொழில் மற்றும் வருமானம் ஆகியவற்றை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாதிரி வரை படத்தின் நகல் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்திருந்தால் தவறு என்மீது தான் என்பது தெரியவந்துவிடும் என்பதாகையால் நாங்கள் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து எனது கவனக்குறைவினால் தான் நடைபெற்றது என்றும ஆதலால் இரண்டாம் எதிர் மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. கண்டெய்னர் லாரி எனது வாகனத்தின் மீது இடிக்கவில்லை என்றும் நானே தான் கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல.